## தமிழ்நாடு புத்தொழில்–புத்தாக்க இயக்கத்

# தொழில் நிறுவனங்களிலும் பரவலாக்கப்படும் சமூகநீதி!

## ‘ஸ்டார்ட்–அப் சென்னை’,‘செய்க,புதுமை’ விழாவில்,

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை,நவ.14–

**சென்னை, ஐ.ஐ.டி.எம். ஆராய்ச்சிப் பூங்காவில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது உத்தரவின் பேரில், ஸ்டார்ட் அப் தமிழ்நாடு ஏற்பாடு செய்திருந்த `ஸ்டார்ட் அப் சென்னை’, `செய்க, புதுமை’ விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டார்.**

**அப்போது தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்துக்கும் தொழில் நிறுவனங்களுக்குமான புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைபெற்றது. மாணவர்களுக்கான தொழில்முனைவுப் போட்டி உள்ளிட்ட பல்வேறு திட்டங்களையும், அப்போது துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார். விழாவில் ஹேக்கத்தானில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கிப் பாராட்டிப் பேசினார்.**

இதைத் தொடர்ந்து துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய சிறப்புரையின் விவரம் வருமாறு:

`ஸ்டார்ட்–அப்– தமிழ்நாடு’ நடத்துகின்ற `ஸ்டார்ட்–அப் சென்னை’, `செய்க புதுமை’ என்ற சிறப்புக்குரிய விழாவில், பங்கேற்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

கார்ப்பரேட் நிறுவனங்களுடன் இணைந்து ஸ்டார்ட்–அப்களை ஊக்கப்படுத்தும் விதமாக புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் இங்கு கையெழுத்து இடப்பட்டுள்ளன.

தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கமும், நான் முதல்வன் திட்டமும் இணைந்து நடத்திய ஹேக்கத்தான் திருவிழாவில், வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

### பெரியார் பெயரில் ஒரு திட்டம்

இங்கு தந்தை பெரியார் பெயரில், பட்டியலின, பழங்குடியினர் தொழில்முனைவோருக்கு ஒரு திட்டம். அதேபோல் பெண் தொழில்முனைவோர்களை ஊக்குவிக்கின்ற ஒரு திட்டம். மாணவர்களுக்கு என்று ஒரு தனித் திட்டம். இப்படி ஸ்டார்ட்–அப் இயந்திரத்திற்குள் சமூகநீதி இயந்திரத்தை வைத்து தொடங்கியதற்காக ஸ்டார்ட்–அப் தமிழ்நாடு நிறுவனத்தைப் பாராட்டியே ஆக வேண்டும்.

தமிழ்நாட்டின் தொழில்வளர்ச்சிக்கு அடித்தளமிட்ட மகத்தான தலைவர், நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதெல்லாம் ஆட்சிக்கு வருகிறதோ, அப்போதெல்லாம் தமிழ்நாட்டில் தொழில்வளர்ச்சி ஏற்பட்டு இருக்கிறது.

### ஸ்டார்ட்– அப் சென்னை

1970–ஆம் ஆண்டிலேயே டேன்செட்கோ என்று சொல்கின்ற தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தை அப்போதைய முதலமைச்சர் நம் கலைஞர் அவர்கள் உருவாக்கினார். கலைஞர் அவர்களின் வழியில் தொழிற்துறையில் பல புதுமையான, முற்போக்கான முயற்சிகளை, திராவிட மாடல் அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது. அதில் ஒன்றுதான் இந்த விழா.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.11.2024) சென்னை, ஐஐடிஎம் (IITM) ஆராய்ச்சி பூங்காவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ”நான் முதல்வன் திட்டம் மற்றும் தமிழ் நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கமும் இணைந்து ஒருங்கிணைத்த நிரல் திருவிழாவில் வெற்றி பெற்ற மாணவர்களுடன் குழு புகைப்படம் எடுத்து கொண்டார். இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் இல.நிர்மல்ராஜ், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெ.இன்னசென்ட் திவ்யா, தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க இயக்கத்தின் இயக்குநர் ரா.அம்பலவாணன் இ.த.க.ப., ஐ.ஐ.டி. இயக்குநர் காமகோடி வீழிநாதன், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் சிவராஜா ராமநாதன், துபாய் இன்டர்நேசனல் நிதி மையத்தின் இக்னைட் அமைப்பின் அலெக்ஸ் பவன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

`ஸ்டார்ட்–அப் சென்னை, செய்க புதுமை’ எனும் இந்த பெயரே சிறப்பாகவும் புதுமையாகவும் இருக்கிறது. சென்னை எப்போதுமே புதுமையைச் செய்யும் அல்லது புதுமையைத் தயக்கமின்றி வரவேற்கும். எனவே, பொருத்தமான ஒரு நல்ல பெயரை இந்த நிகழ்ச்சிக்கு வைத்து இருக்கிறீர்கள். அதற்கு உங்களுக்குப் பாராட்டுகள்.

வெற்றிபெற்ற தொழில் நிறுவனங்களை எடுத்துப் பார்த்தோம் என்றால், அவர்களின் வெற்றிக்குப் புதுமையான யோசனைகள், தொழில்நுட்பங்கள், வியாபார நுணுக்கங்கள் போன்ற புதுமைகள்தான் முக்கிய காரணமாக இருந்திருக்கும். எனவே, ஸ்டார்ட்–அப்களைப் பொறுத்தவரை புதுமையான முயற்சிகள், புதிய சிந்தனைகள் நிறைய வரவேண்டும். தமிழ்நாடு முழுவதும் தொழில் வளர்ச்சி இருக்க வேண்டும் என்பதுதான் நம் திராவிட மாடல் அரசின், முதலமைச்சரின் ஒரே இலட்சியம்.

### வேலைவாய்ப்புகள்

தொழில்வளம் பெருகினால்தான், வேலைவாய்ப்புகள் பெருகும். சிறிய நகரங்களில் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் நோக்கில்தான் `ஸ்டார்ட்–அப் தமிழ்நாடு ரீஜினல் ஹப்சை’ மதுரை, ஈரோடு, திருநெல்வேலி ஆகிய மாநகரங்களில் சென்ற ஆண்டு நம் தமிழக அரசு தொடங்கியது.

நேற்று முன்தினம்கூட `தி இந்து’ ஆங்கிலப் பத்திரிக்கையில் ஒரு செய்தியைப் படித்தேன். அதைப் படிக்கும்போது மிக மகிழ்ச்சியாக இருந்தது. `திருநெல்வேலி ஸ்டார்ட்–அப் மட்டும் கடந்த மூன்று ஆண்டுகளில் கிட்டத்தட்ட 405 ஸ்டார்ட்–அப் நிறுவனங்களை உருவாகியுள்ளன’ என்ற செய்தியைப் பெருமையாகக் கூறுகிறது.

### 50 சதவிகிதம் பெண்கள்

மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசில், தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி பெருகியுள்ளது. நாம் ஆட்சிக்கு வருவதற்கு முன், வெறும் 2 ஆயிரத்து 600 புத்தொழில் நிறுவனங்கள்தான் இருந்தன. இன்றைக்கு நம் அரசின் திட்டங்கள் மூலம் 2 ஆயிரத்து 600–லிருந்து புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 9 ஆயிரத்து 600 ஆக உயர்ந்துள்ளது. இதில், நம்மை ஊக்கப்படுத்தும் விஷயம் என்னவென்றால், 50 சதவிகிதம் பெண்கள் புதிய தொழில்முனைவோர்களாக உருவாகியுள்ளனர். இது நம் அரசு பெண்களுக்கு அளிக்கும் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.

அதன்பிறகு, மேலும் ஆறு இடங்களில் ஒசூர், சேலம், தஞ்சாவூர், கடலூர், கோவை, திருச்சியிலும் கூடுதலாக ஸ்டார்ட்–அப் தமிழ்நாடு ரீஜினல் ஹப்ஸ் உருவாக்கப்பட்டுள்ளன.

### சர்வதேசத் தரம்

நம் மாநிலத்தில் செயல்படும் நிறுவனங்களை சர்வதேசத் தரத்திற்கு உயர்த்தும் நோக்கத்தில் தமிழ்நாடு அரசு, துபாயில் சர்வதேசப் புத்தொழில் ஒருங்கிணைப்பு மையத்தை உருவாக்கியுள்ளது. விரைவில், இதுபோன்ற மையங்கள் சிங்கப்பூரிலும், அமெரிக்காவிலும் நிறுவப்பட உள்ளன.

தமிழ்நாட்டு நிறுவனங்கள் சர்வதேசப் புத்தொழில் கண்காட்சிகளில் பங்கேற்க, பல்வேறு வசதிகளை ஏற்படுத்தி வருகின்றன. அண்மையில் துபாயில் நடைபெற்ற ஜி–டெக்ஸ் புத்தொழில் கண்காட்சியில் பங்கேற்க, தமிழ்நாட்டைச் சேர்ந்த 19 நிறுவனங்களுக்கு தமிழ்நாடு அரசு ஊக்கத்தொகை வழங்கியுள்ளது. அதேபோல் 18 நிறுவனங்கள் பின்லாந்தில் நடைபெறும் பிரமாண்ட ஸ்டார்ட்ப்–அப் நிகழ்வுகளில் பங்கேற்க உள்ளன.

### ஒரு ட்ரில்லியன் டாலர்

நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2030–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரம் கொண்ட மாநிலமாக உருவாக வேண்டும் என்ற இலக்கை நிர்ணயித்தார். ஒரு ட்ரில்லியன் பொருளாதாரத்தை எட்ட வேண்டும் என்றால், பெரிய தொழில்நிறுவனங்களின் பங்களிப்பு எந்த அளவிற்கு முக்கியமோ அதே அளவுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், ஸ்டார்ட்–அப் நிறுவனங்களின் பங்களிப்பு மிகமிக அவசியமாகும்.

ஆகவே, இத்தகைய ஸ்டார்ட்–அப் நிறுவனங்கள் தமிழ்நாடு முழுவதும், அனைத்து மாவட்டங்களிலும் உருவாக வேண்டும். அனைத்து தரப்பினராலும் உருவாக்கப்பட வேண்டும். இதனை சாத்தியப்படுத்துவதற்கான `ரோடு மேப்’ என்று சொல்கின்ற வகையில், இன்றைக்கு இந்த நிகழ்ச்சி இவ்வளவு சிறப்பாக நடைப்பெற்றுகொண்டு இருக்கிறது.

### சமூகங்களின் எழுச்சி

நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒடுக்கப்பட்ட சமூகங்களிலிருந்து தொழில் முனைவோர்கள் உருவாக வேண்டும் என்று 30 கோடி ரூபாயை ஒதுக்கி, தமிழ்நாடு எஸ்.சி., எஸ்.டி ஸ்டார்ட்–அப் பண்ட் என்ற திட்டத்தை, 2023–ஆம் ஆண்டு துவக்கி வைத்தார். அந்தத் திட்டத்திற்கு கிடைத்த மிகப்பெரிய வரவேற்பு மற்றும் வெற்றியை அடுத்து அதற்கான நிதியை இன்றைக்கு 50 கோடி ரூபாயாக நம் முதலமைச்சர் அவர்கள் உயர்த்த உள்ளார்.

`எல்லோருக்கும் எல்லாம்’ என்ற நம் திராவிட மாடல் அரசின் கொள்கை அடிப்படையில், இந்த ஆண்டு மாற்றுத் திறனாளிகளுக்கும், திருநங்கைகள், திருநம்பியர்களுக்கும் ஸ்டார்ட்–அப் நிறுவனங்களைத் தொடங்க நம் முதலமைச்சர் அவர்கள் நிதி உதவி அளிக்க உள்ளார்.

எனவே, இளைஞர்கள், பெண்கள் புதுப்புது பிசினஸ் ஐடியாக்கள் பற்றி சிந்திக்க வேண்டும். நீங்கள் யோசனைகளை மட்டும் உருவாக்குங்கள். அந்த யோசனைகளை நடைமுறைப்படுத்த அனைத்து உதவிகளையும் நம் தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் உங்களுக்குச் செய்யும்.

### மானியம், வங்கிக்கடன்

அதுமட்டுமல்ல, நீங்கள் என்ன தொழில் தொடங்க இருக்கிறீர்களோ, அதற்கான பயிற்சியையும் நம் கழக அரசே கொடுக்கிறது. மானியம், வங்கிக்கடன் என உங்களுக்கு பொருளாதார ரீதியாக உதவ, நம் அரசு எப்பொழுதுமே தயாராக இருக்கிறது.

இந்த சிறப்புக்குரிய விழா, வெற்றிபெற அன்பையும், வாழ்த்துகளையும் கூறி, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

---

## அமைச்சர்கள் எ.வ.வேலு – பி.கே.சேகர்பாபு தலைமையில்

# ‘திருக்கார்த்திகை தீபத்திருவிழா 2024’ முன்னேற்பாடுகள் குறித்து ஆய்வுக்கூட்டம்!

## திருவண்ணாமலையில் நடைபெற்றது!



பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் தலைமையில் நேற்று முன்தினம் (12.11.2024) திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் அருணாச்சலேசுவரர் திருக்கோயில் திருக்கார்த்திகை தீபத்திருவிழா–2024 முன்னேற்பாடுகள் குறித்து ஆய்வுக்கூட்டம். நடைபெற்றது. இந்நிகழ்வில் தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி(செங்கம்), பெ.சு.தி. சரவணன் (கலசப்பாக்கம்), மாநில தடகளச் சங்கத்துணைத்தலைவர் மரு.எ.வ.வே.கம்பன் மற்றும் அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

*திருவண்ணாமலை, நவ. 14-*

*பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் தலைமையில் நேற்று முன்தினம் (12.11.2024) திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் அருணாச்சலேசுவரர் திருக்கோயில் திருக்கார்த்திகை தீபத்திருவிழா 2024 முன்னேற்பாடுகள் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில் தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி(செங்கம்), பெ.சு.தி. சரவணன் (கலசப்பாக்கம்), மாநில தடகளச் சங்கத்துணைத்தலைவர் மரு.எ.வ.வே. கம்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*இக்கூட்டத்தில் திருக்கார்த்திகை தீபத்திருவிழாவை முன்னிட்டு மேற்கொள்ளப்படவுள்ள பணிகள் குறித்து மாவட்ட நிர்வாகம் சார்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் காவல்துறை சார்பாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் , இந்து சமய அறநிலையத்துறை சார்பாக இணை ஆணையர், மாநகராட்சி நிர்வாகம் சார்பாக ஆணையாளர் , போக்குவரத்து துறை சார்பாக பொது மேலாளர் மற்றும் நெடுஞ்சாலைத் துறை, தீயணைப்புத்துறை உள்ளிட்ட அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் விரிவாக அமைச்சர் பெருமக்களிடம் எடுத்துரைத்தனர்.*

*தொடர்ந்து இக்கூட்டத்தில் வர்த்தக சங்கம், தனியார் பஸ் உரிமையாளர் சங்கம், அருணகிரிநாதர் மணிமண்டபம் உள்ளிட்ட பொதுநல சங்கங்கள் மற்றும் பத்திரிக்கையாளர்கள் உள்ளிட்டவர்களிடம் கடந்த கால தீபத்திருவிழாவின் போது ஏற்பட்ட இடையூறுகள் குறித்தும் அவற்றை சரி செய்வதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அமைச்சர் பெருமக்கள் விரிவாக கேட்டறிந்து, அந்த இடையூறுகள் அனைத்தையும் நிவிர்த்தி செய்து பக்தர்கள் மற்றும் உள்ளூர் பொதுமக்களுக்கு எவ்வித இடையூறுகளும் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்க மாவட்ட நிர்வாகம் மற்றும் தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.*

*தொடர்ந்து இக்கூட்டத்தில் அமைச்சர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:*

*முதலமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு சட்டப்பேரவையில் நடைபெற்ற காவல் துறை மானியக்கோரிக்கையின் போது தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சிறப்பாக உள்ளது என்பதற்கு கடந்த ஆண்டு திருவண்ணாமலையில் சிறப்பாக நடைபெற்ற திருக்கார்த்திகை தீபத்திருவிழாவே சான்று என பாராட்டுக்களை தெரிவித்தார்கள். ஆகவே நடப்பாண்டில் வருகின்ற டிசம்பர் 13 அன்று நடைபெறும் கார்த்திகை தீபத் திருவிழாவினை மேலும் சிறப்பாக நடத்துவது குறித்தும், தீபத்திருவிழாவிற்கு வருகைதரும் ஆன்மீக பக்தர்களுக்கு தேவையான குடிநீர், கழிவறை மற்றும் உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகளை முறையாக ஏற்படுத்துவது குறித்தும், திருவண்ணாமலை மாநகருக்குள் திருக்கார்த்திகை தீபத்திருவிழாவின் போது அதிக அளவிலான தற்காலிக பேருந்து நிறுத்தங்களை அமைத்து பேருந்து போக்குவரத்துகளை முறைப்படுத்தி போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்துவது குறித்தும், தேவையான அளவிலான நான்கு சக்கர வாகன நிறுத்தங்களை அமைப்பது குறித்தும், பக்தர்கள் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் தேவையான வழிகாட்டி பலகைகள் அமைப்பது குறித்தும், மலையேறும் பக்தர்களுக்கு உரிய பாதுகாப்பினை உறுதி செய்வது குறித்தும், காவல்துறை சார்பாக திருக்கோயில் வளாகம், கிரிவலப்பாதை மற்றும் மாநகர் முழுதும் போதுமான அளவிலான பாதுகாப்பு பணிகளை ஏற்படுத்துவது குறித்தும், பக்தர்களுக்கு தேவையான மருத்துவ வசதிகளை ஏற்படுத்துவது குறித்தும், திருக்கோயிலுக்குள் பரணி தீபம் மற்றும் மகா தீபத்தின் போது உபயதாரர்கள், கட்டளைதாரர்கள், பொதுமக்கள் மற்றும் அரசு துறை சார்பாக பணியமர்த்தப்படும் அரசு பணியாளர்கள், செய்தி சேகரிக்கும் பணியில் ஈடுபடும் பத்திரிக்கையாளர்கள் உள்ளிட்டவர்களுக்கு முறையாக பாஸ் வழங்குவது குறித்தும் விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.*

*மேலும், இக்கூட்டத்தில் வர்த்தக சங்கம், தனியார் பஸ் உரிமையாளர் சங்கம், அருணகிரிநாதர் மணிமண்டபம் உள்ளிட்ட பொதுநல சங்கங்கள் மற்றும் பத்திரிக்கையாளர்கள் உள்ளிட்டவர்களிடம் கடந்த கால தீபத்திருவிழாவின் போது ஏற்பட்ட இடையூறுகள் குறித்து கேட்டறிந்து அவற்றை சரிசெய்வதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் துறைச்சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. திருவண்ணாமலை மாநகருக்குள் திருக்கார்த்திகை தீபத்திரு விழாவின் போது பக்தர்களிடம் அதிக கட்டணம் வசூலிக்ககூடாது என போக்குவரத்து துறை அலுவலர்கள் மூலமாக ஆட்டோ ஓட்டுநர்கள் சங்கத்திடம் எடுத்துரைக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆகவே வருகின்ற டிசம்பர் 13 அன்று நடைபெறும் திருக்கார்த்திகை தீபதிருவிழா சிறப்பாக நடைபெற அனைத்து அரசு துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும். அனைத்து தரப்பு பொதுமக்களும் ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என அமைச்சர் பெருமக்கள் செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்தனர்.*

---

# துறையூர் சட்டமன்றத் தொகுதி வாக்குச் சாவடி பாக முகவர் ஆலோசனைக் கூட்டம்!

துறையூர், நவ. 14–

துறையூர் சட்டமன்றத் தொகுதி நகரம் ஒன்றியம்,முசிறி கிழக்கு ஒன்றியம் ஆகியவற்றிற்கு பாக முகவர் ஆலோசனை கூட்டத்திற்கு வடக்கு மாவட்ட செயலாளர் காடுவெட்டி தியாகராஜன் தலைமை வைத்தார். துறையூர் எம்எல்ஏ ஸ்டாலின் குமார், மாவட்ட பொருளாளர் மற்றும் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் தர்மன் ராஜேந்திரன், நகரச் செயலாளர் மெடிக்கல் முரளி, ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, சிவ சரவணன், வீரபத்திரன் ஆகியோர் முன்னிலை வைத்தனர். துறையூர் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் பெரம்பலூர் மாவட்ட அணி அமைப்பாளர் தங்க கமல் சிறப்பு விருந்தினர் கலந்து கொண்டு பாக முகவர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு துறையூர் சட்டமன்ற இந்நிகழ்ச்சியில் நகர மன்ற தலைவர் செல்வராணி மலர்மன்னன், துறையூர் ஒன்றியக் குழு தலைவர் சரண்யா மோகன் தாஸ், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கஸ்டம்ஸ் மகாலிங்கம், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் கிட்டப்பா, பூபதி, முசிறி ரமேஷ்பாபு, பிரபு, முருகதுரை, மதியழகன், கார்த்திகேயன், ரெங்கநாதபுரம் கார்த்திகேயன், கண்ணனூர் குமார், செல்வகுமார், வழக்கறிஞர் பழனிவேல், பாஸ்கரன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளை கழகச் செயலாளர்கள், தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---




தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

**சட்டமன்றத் தொகுதி பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி**

**இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு**

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம்.

இதுவரை மூன்று சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயற்சி நடைபெற்று முடிந்துள்ள நிலையில், மண்டலம் 7, 8 – இல் உள்ள கீழ்க்கண்ட சட்டமன்றத் தொகுதிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு.

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 14/11/2024 வியாழக்கிழமை | காலை 9.00 மணி | 8 | தென்காசி | ஸ்ரீ சாரதாம்பா திருமண மண்டபம், இலஞ்சி, தென்காசி மாவட்டம். |
| | மாலை 4.00 மணி | | கடையநல்லூர் | எஸ்.எஸ்.கிராண்ட் மஹால், அச்சம்பட்டி பேருந்து நிலையம் அருகில், கடையநல்லூர் – தென்காசி பிரதான சாலை, தென்காசி மாவட்டம். |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில் இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 09-11-2024

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி